FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318744

1. District : Thoothukudi மாவட்டம் PS: Vigilance and Anti-Corruption Thoothukudi காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 04/2026 மு.த.அ. எண் Date: 10.06.2026 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் On 04.06.2026 Before 15.30 hrs Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.06.2026 Time : நேரம் 17.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.06.2026 Time : நேரம் 17.00 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினி தட்டச்சு மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Keelur Sub Registrar Office Thoothukudi District About 15 Kms East

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு.R.சிவகுமார் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : ராமசந்திரன் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : இந்தியன் நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Special Tahsildar (g) Address : முகவரி Sipcot Unit II, Thoothukudi

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tmt.P.Selvi, aged 40/2026 Sub Register, O/o the Keelur Sub-Registry, Thoothukudi, Thoothukudi District and 1 another.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் No

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed J.Anitha Inspector of Police Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant 10/6/26
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station 10/06/2026.
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court **10.06.2026 at 19.00 hrs**
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name பெயர் **V. ANNALAKSHMI**
Rank நிலை .....No. எண் .....

Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.04/2026

பணிந்து அனுப்பப்படுகிறது.

1. Tmt.Selvi, aged 40/2026, Sub Register, Keelur Sub-Registry, Thoothukudi Thoothukudi District. **Private individual :** 2. Tmt.Anitha, aged 47/2026, W/o Tr.Mathibalan, No.245, Sivanthakulam Road, Thoothukudi.	தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் திருமதி.P.செல்வி பத்திரம் பதிவு செய்ய வரும் பொதுமக்களிடம் பத்திரம் பதிவு செய்வதற்காக அவர்களிடமிருந்து, நேரடியாகவும் ஆவண எழுத்தர்கள் மூலமாகவும் லஞ்சம் வாங்குவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 04.06.2026 ஆம் தேதி மதியம் 15.30 மணி முதல் 19.45 மணி வரை துணை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் திரு.R.சிவகுமார், தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) சிப்காட் - ஓட்டப்பிடாரம், சாமிநத்தம், சில்லாநத்தம் திட்டம் அலகு-2, துணை ஆய்வு குழு அலுவலர் நிலையில், சிப்காட் வளாகம், தூத்துக்குடி மாவட்டம். அவர்களுடன் தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் திரு.R.சிவகுமார், அவர்கள் கொடுத்த புகார் மனுவை 05.06.2026-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலக

பணியில் இருந்தபோது பிற்பகல் 11.00 மணிக்கு பெற்றும், பின்பு உயர் அதிகாரிகளின் அறிவுரையின் பேரில் இன்று 10.06.2026 அலுவலக பணியில் இருந்த போது பிற்பகல் 17.00 மணிக்கு தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 04/2026, பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018–ன் படி மார்ஜினில் கண்ட எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர்: R.சிவகுமார், தனி வட்டாட்சியர்(நில எடுப்பு), சிப்காட் - ஓட்டப்பிடாரம், சாமிநத்தம், சில்லாநத்தம் திட்டம் அலகு-2, சிப்காட் வளாகம், தூத்துக்குடி, பெறுநர்: காவல் ஆய்வாளர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,தூத்துக்குடி. அம்மா, பொருள் : தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அலுவலக திடீர் தணிக்கை செயல்முறைகள் - சட்ட மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. ******

தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் திருமதி.P.செல்வி பத்திரம் பதிவு செய்யவரும் பொதுமக்களிடம் பத்திரம் பதிவு செய்வதற்கு நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மூலமாகவும் லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்திலிருந்து 04.06.2026-ம் தேதி சுமார் 14.30 மணிக்கு புறப்பட்டு மாலை சுமார் 15.00 மணிக்கு தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அலுவலகம் அருகே சென்று எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் ஆய்வாளர் திருமதி.அன்னலெட்சுமி மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் இரகசியமாக கண்காணித்ததில் கீழூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப் பதிவிற்கு வரும் பொதுமக்களிடமிருந்தும் பத்திர எழுத்தர்கள் மூலமாகவும் பத்திரங்கள் பதிவு செய்வதற்கும், பத்திரப் பதிவு சம்பந்தமான ஆவணங்கள் வழங்குதல் மற்றும் இதர அலுவல்கள் செய்வதற்கும் தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் லஞ்சமாக பணம் பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 04.06.2026 மாலை சுமார் 15.30 மணிக்கு தூத்துக்குடி ஒருங்கிணைந்த பத்திரப்பதிவுத்துறை அலுவலக கட்டிட வளாகத்தில் அமைந்துள்ள மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் சென்று திடீர் தணிக்கை செய்ததில் தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் திருமதி.P.செல்வி அவர்களை பெண் காவல் ஆய்வாளர் மூலம் சோதனை செய்த போது அவரிடம் கைப்பற்றக்கூடிய பணமோ, பொருளோ இல்லை. மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் இருந்தவர்களில் ஒருவரான பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த திருமதி.அனிதா, அவரது கணவர் திரு.மதிபாலனுடன் சேர்ந்து திரு.பால்ராஜ் என்பவருக்கு சொந்தமான

மாப்பிள்ளையூரணி கிராமத்தில் அமைந்துள்ள புதிய வீட்டினை அவர்கள் இருவர் பெயரிலும் கூட்டாக விலைக்கு வாங்கி அதனை ஆவண எண் 3000/2026, நாள்:04.06.2026-ன் படி பதிவு செய்திருந்ததாகவும், அந்த ஆவணத்தின் மீது ஆதார் ஹவுசிங் பைனான்ஸ் லிட் என்ற தனியார் நிறுவனத்தில் இருந்து ரூ.10,00,000/- லோன் வாங்குவதற்கு MOD ஆவணம் ஏற்படுத்தி பதிவு செய்வதற்காக வந்திருந்தவரை காவல் ஆய்வாளர் திருமதி.அன்னலெட்சுமி அவர்கள் மூலம் சோதனை செய்த போது அவரது கைப்பையின் நடுப்பகுதியில் 'ஸ்ரீதேவி ஜீவல்லர்ஸ்" என இருபுறமும் அச்சிடப்பட்ட மஞ்சள் நிற சிறிய துணிப் பையினுள் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்த பணம் ரூ.55,500/- குறித்து விளக்கம் கேட்க மேற்படி வீட்டின் உரிமையாளர் திரு.பால்ராஜ் என்பவருக்காக கொடுக்க வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். மேற்படி திரு.பால்ராஜ் அவர்களிடமிருந்து வீடு வாங்கியதற்கான ஆவணமானது நேற்றைய தினம் (04.06.2026) காலையிலேயே பதிவு செய்யப்பட்டு திரு.பால்ராஜ் அவர்களும் சென்றுவிட்ட நிலையில், காலையிலேயே திரு.பால்ராஜ் அவர்களிடம் கொடுக்காமல் தற்போது திடீர் சோதனையின் போது திரு.பால்ராஜ் அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்துள்ள பணம் என்று கூறுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாததாலும், அவர் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்ததால் மேற்படி பணம் ரூ.55,500/-ஐ அவர் லஞ்சமாக கொடுப்பதற்கு வைத்துள்ள பணம் என்று கருதி ரூ.55,500/-மும், மஞ்சள் நிற சிறிய துணிப் பையும், நேற்று 04.06.2026-ம் தேதி மாலை சுமார் 15.30 மணி முதல் 19.45 மணிவரை தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் இருந்த அனைவரிடமும் எனது முன்னிலையில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது அலுவலகத்தின் 1) தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அலுவலகம் வருகை பதிவேடு-2026, 2) தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அலுவலகம் தனிநபர் பண இருப்பு பதிவேடு 29.11.2024 முதல் உள்ளது, 3) DEO, IPCO வருகை பதிவேடு 2025 முதல் உள்ளது மற்றும் 4) DEO & IPCO தனிநபர் பணம் இருப்புப் பதிவேடு 22.01.2025 முதல் உள்ளது ஆகியவையும் கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் ரூ.55,500/- மற்றும் மஞ்சள் நிற சிறிய துணிப்பை மற்றும் செயல்முறையின் போது மேற்படி சோதனையில் கைப்பற்றப்பட்ட பணம், ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்களை இணைத்து உரியவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். Sd/- 05.06.2026 (R.Sivakumar), Special Tahsildar

(Land Acquisition), Sipcot Unit II, Thoothukudi. Sir, Received the complaint on 05.06.2026 at 11.00 hrs and obtaining permission from Superior officers, today I have registered the FIR in Thoothukudi V&AC Cr.No.04/2026, U/s 7 of PC Act, 1988 as Amended in 2018. Sd/- 10.06.2026, V.Annalakshmi, Inspector of Police, V&AC, Thoothukudi Detachment. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.R.சிவகுமார் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்து மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக திருமதி.J.அனிதா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

10/06/2026

V. ANNALAKSHMI
Inspector of Police,
V & AC, Thoothukudi.